செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பாரத மொழிகளின் திருவிழா
(28.09.2023-11.12.2023)
"மொழிகள் பல; உணர்வு ஒன்றே"

# தமிழக நாட்டுப்புற மரபுகள்

(Folk Traditions of Tamil Nadu)

நாள்: 03.11.2023

## கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

### அறிவிப்பும் அழைப்பும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் "பாரத மொழிகளின் திருவிழா"வினை முன்னிட்டுக் கருத்தரங்குகள், பயிலரங்குகள் ஆகிய கல்விசார் நிகழ்வுகளை நடத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக நாட்டுப்புறவியல் துறைசார்ந்து "தமிழக நாட்டுப்புற மரபுகள் (Folk Traditions of Tamil Nadu) எனும் பொருண்மையில், தமிழக நாட்டுப்புற மரபுகளை மீட்டுருவாக்கம் செய்யும் நோக்கில் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டியை நடத்துகிறது. இக் கட்டுரைப் போட்டியில் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தலாம். கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை இக்கட்டுரைப் போட்டியில் பங்கேற்கச் செய்து ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### கட்டுரைத் தலைப்பு - தமிழர் கலை மரபுகள்

#### இளங்கலைப் பட்ட மாணவர்கள்

பண்டைய தமிழ்ச் சமூகம், அக்கால ஏனைய உலகச் சமூகங்களைவிட மேம்பட்ட, வளமைமிக்க சமூகமாக திகழ்ந்துள்ளது என்பதைத் தமிழர் தம் நீர் மேலாண்மை, அரசியல், மருத்துவம், கலைகள், அறிவியல் நுட்பம் போன்றவற்றிலிருந்து அறிந்துகொள்ள முடியும். சித்தன்ன வாசல் ஓவியங்கள், தஞ்சை பெரிய கோவில் ஓவியங்கள் போன்றவைத் தமிழரின் ஓவியக்கலை ஆற்றலை வெளிப்படுத்தி நிற்கின்றன. அதேபோல் தமிழரின் கட்டடக்கலை, சிற்பக்கலை, இசைக் கலை, நடனக் கலை, நாடகக் கலை, தற்காப்புக் கலை ஆகியன பழந்தமிழரின் பண்பாட்டையும் தனித்தன்மையையும் எடுத்துரைக்கின்றன. அவற்றின் மரபுத் தொடர்ச்சி இன்றும் தொடர்கின்றன. கால ஓட்டத்தில் பல கலைகள் அழிந்தும் போயின. அவற்றை மீட்டெடுக்கும் வகையில் தமிழர் கலை மரபுகளைப் பறைசாற்றும் வகையில் கட்டுரைகளை எழுதி அனுப்பலாம்.

## கட்டுரைத் தலைப்பு - தமிழர் வாழ்வியல் மரபுகள்

### முதுகலைப் பட்ட மாணவர்கள்

பழந்தமிழ் இலக்கியங்கள் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியலை எடுத்துரைக்கும் கருவூலமாகத் திகழ்கின்றன. அண்மையில் கிடைத்த அகழாய்வுச் சான்றுகளும் தமிழினத்தின் மேன்மையையும் தொன்மையையும் தனித்தன்மையையும் நிறுவுகின்றன. தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நகர நாகரிகத்தோடு தங்கள் வாழ்வியலைக் கட்டமைத்துள்ளனர். குடும்ப உறவு, வேளாண்மை, களவு, கற்பு என்ற வாழ்வியல் அறம், ஆண் பெண் ஒழுகலாறுகள், பிற மனிதர்களை நேசிக்கும் மனித நேயம், விருந்தோம்பல், கலை இலக்கியப் பண்பாட்டுக் கட்டமைப்பு, வழிபாடு, விழாக்கள், எல்லாவற்றிற்கும் மேலாக உயிர்மநேயம் போன்றன ஏனைய உலகச் சமூகங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்ச் சமூகம் தனக்கெனத் தனித்தன்மையோடு இருந்திருக்கின்றன. இத்தகைய தமிழர் வாழ்வியலையும் வாழ்வியல் மரபுகளையும் கட்டுரையாக எழுதி அனுப்பலாம்.

## கட்டுரைப் போட்டிக்கான விதிமுறைகளும் விவரங்களும்

- கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமே இக்கட்டுரைப் போட்டியில் பங்கேற்க வேண்டும்.
- தட்டச்சுச் செய்து அனுப்பாமல் கையால் எழுதப்பட்ட படியை (Original) அனுப்ப வேண்டும்.
- நகல் (Xerox) எடுத்து அனுப்புதல் கூடாது.
- கட்டுரை 10 பக்கங்களுக்கு மிகாமலிருக்க வேண்டும்.
- கட்டுரைகள் தமிழ் மொழியில் மட்டுமே அமையப் பெற்றிருக்க வேண்டும்.
- மாணவர்கள் தாங்கள் எழுதிய கட்டுரையைக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்கள் வழியாகவோ நேரடியாகவோ அனுப்பலாம்.
- ஒவ்வொரு பிரிவிலும் தலா 6 பேருக்குப் பரிசுகள் வழங்கப்படும்.
- முதல் பரிசு ரூ.10,000/-, இரண்டாம் பரிசு ரூ.7,000/-, மூன்றாம் பரிசு ரூ.5,000/-, ஆறுதல் பரிசு ரூ. 3,000( மூவருக்கு).
- பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கட்டுரைகள் வந்துசேர வேண்டிய இறுதி நாள்: 30.11.2023

- எக்காரணத்தைக் கொண்டும் போட்டித் தொடர்பாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு நேரில் வரவோ, தொலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளவோ கூடாது.
- மாணவர் பெயர், தந்தை/தாய் பெயர், படிக்கும் வகுப்பு, கல்லூரி/பல்கலைக்கழகப் பெயர் மற்றும் முகவரி, வீட்டு அஞ்சல் முகவரி, அலைபேசி எண், புலன எண், மின்னஞ்சல் முகவரி ஆகியனவற்றைத் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும்.
- கட்டுரைகளை அஞ்சலில் மட்டுமே கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி : **இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100.**

……..